00171

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கல்விப் பீடம்
முன்பிள்ளைப் பருவ மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக் கல்வி
இறுதிப் பரீட்சை – 2020/2021

**EPU 3338 – ஆரம்ப நிறுவனங்கள், ஆரம்ப பாடசாலைகளை வடிவமைத்தல் திட்டமிடல்**

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

திகதி : **29/01/2023** நேரம்: மு.ப 09.30 – மு.ப 11.30

## பகுதி I

1. நிறுவனம் எனும் பதத்தினை உமது சொந்த மொழி நடையில் விளக்குக.

2. முன்பள்ளி ஆசிரியரொருவர் கொண்டிருக்க வேண்டிய தலைமைத்துவ தேர்ச்சிகள் ஐந்தினை (05) எழுதுக.

3. நிறுவனத் தலைவர் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ளும் ஐந்து (05) மூலங்களை எழுதுக.

4. ஆசிரியரொருவரின் சமூகப் பொறுப்புகள் என்ன? உதாரணங்கள் மூலம் விளக்குக.

5. ஆரம்பபிரிவு ஆசிரியர் என்ற வகையில் வெளியக செயற்பாடுகளை திட்டமிடும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் ஐந்தினை (05) எழுதுக.

6. முன்பள்ளி அல்லது முறைசார் பாடசாலையில் நீண்டகால திட்டமிடல்கள் இரண்டினை (02) குறிப்பிடுக.

7. முறைசார் கணிப்பீட்டிற்கான உதாரணங்கள் மூன்றினையும் (03) முறைசாரா கணிப்பீட்டிற்கான மூன்று (03) உதாரணங்களையும் தருக.

8. முன்பள்ளி கல்விக்கான சட்டரீதியான அமைப்புகளாக அங்கீகரிக்கப்பட்ட ஐந்து(05) நிறுவனங்களை எழுதுக.

(05 x 08 = 40 புள்ளிகள்)

## பகுதி II

9.

i. "நிறுவனமொன்றின் இறுதி நோக்கமானது அந்நிறுவனத்தில் கடமையாற்றும் நபர்களின் தேவையை பூர்த்தி செய்வதாகும்." முன்பள்ளியை நிறுவன அமைப்பாக கருத்திற் கொண்டு மேற்கூறிய கூற்றினை உதாரணங்கள் மூலம் விளக்குக.
(10 புள்ளிகள்)

ii. ரொபின் (1992) கூற்றுப்படி, முகாமையாளர் நிறுவனத்தின் முகாமைத்துவ கட்டமைப்பினை வடிவமைக்க முன்னர் அவற்றில் இனங்கண்டு கருத்திற் கொள்ள வேண்டிய ஆறு (06) முக்கிய விடயங்கள் காணப்படுகிறது என்றார்.

உங்களது எண்ணங்களிற்கேற்ப அவற்றில் நான்கு (04) முக்கிய விடயங்களை சுருக்கமாக முன்வைக்குக.
(10 புள்ளிகள்)

10.

i. பெனின் (1995) தலைவர், முகாமையாளர் ஆகியோருக்கு இடையேயான வேறுபாட்டை முன்வைத்தார். அவற்றின் அடிப்படையில் தலைவர் என்பவரை எவ்வாறு இனங்காண்கிறீர் என்பதனை விளக்குக.
(10 புள்ளிகள்)

ii. முன்பள்ளி முதன்மை ஆசிரியர், தலைவர் என்ற அடிப்படையில் எதிர்கொள்ளும் ஐந்து (05) சவால்களை விளக்குக.
(10 புள்ளிகள்)

11.

i. "முகாமைத்துவம் என்பது முறையாக உறுப்பினர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட கலையாகும்."
உண்மைக் காரணிகளுடன் இக்கூற்றினை நியாயப்படுத்துக.
(10 புள்ளிகள்)

ii. திட்டமிடல் எனும் பதத்தினை வரைவிலக்கணப்படுத்துக. ஏதேனும் வேலையொன்றில் திட்டமிடலின் முக்கியத்துவத்தினை விளக்குக.
(10 புள்ளிகள்)

12.

i. நாளாந்த திட்டமிடல், குறுகிய கால திட்டமிடல், நீண்டகால திட்டமிடல் என்பவற்றினை வெவ்வேறாக விளக்குக.
(10 புள்ளிகள்)

ii. முன்பள்ளியொன்றின் நாளொன்றிற்கான திட்டமிடலை தயாரிக்குக.
(10 புள்ளிகள்)

13.

i. பாடசாலை ஆசிரியரென்ற வகையில் நீர் பயன்படுத்தக்கூடிய வளங்களின் வகைகளை சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. "அனைத்து ஆசிரியர்களும் நேர முகாமைத்துவ நிபுணத்துவமுடையவராக காணப்பட வேண்டும்"

நேரமுகாமைத்துவ நிபுணத்துவமுடையவராக ஏன் காணப்பட வேண்டும்? என்பதனை உதாரணங்கள் மூலம் நியாயப்படுத்துக.

(10 புள்ளிகள்)

**பதிப்புரிமை பெற்றது**